அ.வ.எண்: 35/2015 நாள்: 09.04.2026

பி.வா.சா.2 – மாணிக்கம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், தாவா சொத்தில் தங்களுக்கும் பங்கு உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் மொத்தம் எத்தனை பங்குகள் என்றால், தாவா சொத்து மொத்தம் 8 ஏக்கர் 27 சென்ட் ஆகும். அதில் மொத்தம் 5 பங்காளிகள். அதில் வாதிக்கு 1 ஏக்கர் 65 சென்ட் ஆகும். மேற்படி வாதிக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 65 சென்ட்–ன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது சர்வே எண் 18/1 ஆகும். தாவா பிராதில் மேற்படி சர்வே எண் 18/1 எத்தனாவது இலக்க சொத்தாக உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண் 18/1 இல் வாதியின் தகப்பனாருக்கு எத்தனை பங்கு பாத்தியம் என்றால் ஐந்தில் ஒரு பங்கு பாத்தியம். மேற்படி ஐந்தில் ஒரு பங்கு வாதியின் தகப்பனாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. தாவா சொத்தை பொறுத்தவரை எந்த ஒரு வழக்கறிஞரிடமும் எழுத்துப்பூர்வமான ஆலோசனை நான் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் போட்டு பார்த்ததற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பெரியசாமி அவரது மனைவி காளியம்மாளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று MC No.103/58, MP.No.466/60, MP.No.235/61, ஆகியவற்றில் மாண்புமிகு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததை அடுத்து, அந்த ஜீவனாம்சமாக வாதியின் தகப்பனார் தனக்கு பாத்தியப்பட்ட ஐந்தில் ஒரு பங்கை அவரது மனைவிக்கு கிரையமாக கொடுத்தது செல்லுபடி ஆகுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தாவா சொத்தை ஜீவனாம்சமாக கொடுக்க வேண்டும் என்று உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. பெரியநாயகி மற்றும் வாதி ஆகியோர் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியை மைனராக காண்பித்து அவரது தந்தை பெரியையா சொத்தை கிரையம் கொடுப்பதற்கு முன்பாக நீதிமன்றத்தில் அனுமதி ஏதும் பெற்றாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மொத்தம் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. நான் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொத்தை கிரையம் பெற்றதாகவும், அதில் ஈக்விட்டி அலாட்மென்ட் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஈக்விட்டி அலாட்மென்ட் என்றால் என்ன என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக கிரைய ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது என்றால் 2007 ஆம் ஆண்டு ஏற்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதா என்றால் நிறைவேற்றப்பட்டு விட்டது.

4. மேற்படி கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் நிறைவேற்றப்பட்டது என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. தாவா சொத்து தற்போது காலியாக உள்ளதா அல்லது கட்டிடம் உள்ளதா என்றால் காலி இடமாக தான் உள்ளது. தாவா சொத்து நஞ்சை நிலமா அல்லது புஞ்சை நிலமா என்றால் புஞ்சை நிலம் என்று தான் கூறினார்கள். வாதிக்கு பங்கு உள்ள சொத்தை நான் வாங்கி உள்ளதால் அது வாதியின் பங்கை எந்த வகையிலும் கட்டுப்படுத்த என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.09 14:54:45 +0530